வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: மலர்விழி

நாள்: 24.10.2024 நேரம்: மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

விண்வெளித் துறைக்கு, பிரத்தியேகமான ஆயிரம் கோடி ரூபாய் தொழில் துணிவு மூலதன நிதி ஒன்றை உருவாக்க, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அரசின் புதிய உயிரி தொழில்நுட்ப கொள்கையினால், பசுமை வளர்ச்சிக்கு மாறும் முயற்சிகள் வலுப்பெறும் என்று, மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

நாட்டின் சாலை பாதுகாப்புக் கட்டமைப்பில், நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப் படுவதாக, மத்திய சாலைப் போக்குவரத்து, மற்றும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

வங்கக் கடலில் உருவான டானா புயல் இன்று இரவு பூரி மற்றும் சாகர் தீவுக்கு இடையே, மிக தீவிரப் புயலாக, ஒடிசா மற்றும் மேற்குவங்க கரையை கடக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

---

***அமைச்சரவை*** (17)

விண்வெளித் துறைக்கு, பிரத்தியேகமான ஆயிரம் கோடி ரூபாய் தொழில் துணிவு மூலதன நிதி ஒன்றை உருவாக்க, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. தொடக்கப்படும் நாள் முதல், 5 ஆண்டுகளுக்கு

இந்த நிதியை செயல்படுத்தவும், முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் தேவைகளுக்கு ஏற்றபடி, ஆண்டுக்கு 150 முதல் 250 கோடி ரூபாய் நிதி வழங்கவும் முடிவு செய்யப் பட்டுள்ளது. புதுமையாக்க முயற்சிகளை ஊக்குவித்து, பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும் நோக்கத்திற்கு ஏற்ப, இந்தியாவின் விண்வெளித் துறையை மேம்படுத்தும் வகையில், இந்த நிதி வடிவமைக்கப் படுவதாக, ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இன்று புதுடெல்லியில், மத்திய அமைச்சரவையின் முடிவுகள் பற்றிய செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தார். மொத்தம் 2 ஆயிரத்து 245 கோடி ரூபாய் மதிப்பீட்டில், அமராவதி நகருக்கு ரயில் இணைப்பு வழங்க, மத்திய அமைச்சரவை முடிவு செய்து இருப்பதாகவும், இதன்மூலம், ஹைதராபாத், கொல்கத்தா, மற்றும், சென்னைக்கும், அமராவதிக்கும் இடையே, நேரடி ரயில் இணைப்பு வழங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். பீகாரில், 256 கிலோ மீட்டர் ரயில் பாதைகளை, இரட்டை பாதைகளாக மாற்றும் பணிகளுக்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

------------------------------

*மோடி-வாழ்த்து* (10)

இன்று, இந்தோ-திபேத்திய எல்லை காவல் படையின் உதய நாளை ஒட்டி, இப்படையைச் சேர்ந்த பனிவீரர்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். சவால் நிறைந்த, கரடு முரடான எல்லைப்புற மலைப் பகுதிகளில், மக்களை பாதுகாத்து வரும் இந்தோ-திபேத்திய எல்லைக் காவல் படை, துணிச்சல், மற்றும் அர்ப்பணிப்பு

உணர்வின் சின்னமாகவே திகழ்வதாக, பிரதமர் கூறியுள்ளார். இயற்கை பேரிடர் சம்பவங்களின் போது, இந்தோ-திபேத்திய எல்லைக் காவல் படையினர் மேற்கொள்ளும் மீட்புப் பணிகளை தாம் பாராட்டுவதாகவும், இத்தகைய பணிகளால், இப்படையினர் குறித்து மக்கள் பெருமிதம் அடைவதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

-------------------------------

*மோடி-பாலி* (11)

பாலி மொழிக்கு செம்மொழி அந்தஸ்து வழங்குவதான அரசின் முடிவினால், பகவான் புத்தரின் போதனைகளை போற்றுவோர், மிகுந்த மகிழ்ச்சி அடைந்து இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். அரசின் முடிவு குறித்து, கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் இன்று சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவிற்கான பதிலில், பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார். செம்மொழியான பாலி என்பது குறித்து, இலங்கை தலைநகர் கொழும்பில் நடைபெற்ற குழு விவாதத்தில், பல்வேறு நாடுகளில் இருந்து பங்கேற்ற பௌத்த குருமார்கள் மற்றும் அறிஞர்களுக்கு தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதமர் கூறியுள்ளார். கலாச்சார உறவுகளுக்கான இந்திய சபை சார்பில், கொழும்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

-------------------------------

*அறிவியல்-தொழில்நுட்பம்* (14)

பொருளாதாரம், சுற்றுச் சூழல், மற்றும், வேலை வாய்ப்பிற்கான, மத்திய அரசின், Bio-E3 உயிரி தொழில்நுட்ப கொள்கையினால், நாட்டின் பொருளாதார வளர்ச்சியும், பசுமை வளர்ச்சிக்கு மாறும் முயற்சிகளும் வலுப்பெறும் என்று, மத்திய அறிவியல்- தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், இந்தோ-ஜெர்மன் அறிவியல் தொழில்நுட்ப ஒத்துழைப்பின் பொன் விழாக் கொண்டாட்டங்களில் உரையாற்றிய அவர், நடப்பு அரசின் கீழ் நாடு அறிவியல் தொழில்நுட்பத் துறையில், அதிக வளர்ச்சி அடைந்து இருப்பதாக தெரிவித்தார். இந்தியாவின் விண்வெளி நிகழ்ச்சிகள் அண்மையில் முக்கிய சாதனைகளை எட்டி இருப்பதையும், இந்தியாவின் ஸ்டார்ட்-அப் துறை, உலக அளவில் 3ஆம் இடம் பிடித்து இருப்பதையும் அமைச்சர் பாராட்டினார். இந்தியாவிற்கும், ஜெர்மனிக்கும் இடையிலான அறிவியல்-தொழில்நுட்ப ஒத்துழைப்பினால், இருதரப்பு உறவுகளும் வலுப்பெறுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

------------------------------

*சாலை பாதுகாப்பு (18)*

நாட்டின் சாலை பாதுகாப்பு கட்டமைப்பில், செயற்கை நுண்ணறிவு உட்பட, எல்லா நவீன தொழில்நுட்பங்களையும் அரசு பயன்படுத்தி வருவதாக, மத்திய சாலை போக்குவரத்து, மற்றும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில்,

போக்குவரத்து உள்கட்டமைப்பு தொழில்நுட்பங்கள் பற்றிய கண்காட்சியை தொடக்கி வைத்து பேசிய அவர், சாலை அமைக்கும் பணிகளிலும், நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப் படுவதாக தெரிவித்தார். சாலைகளை, வாகனப் பாதுகாப்பு அதிகம் உள்ளதாக அமைக்க ஏதுவாக, சிறந்த நடைமுறைகளை பகிர்ந்து கொள்ளுமாறு, திறமை வாய்ந்த பொறியாளர்களை அரசு ஊக்குவித்து வருவதாகவும் அவர் கூறினார். நாட்டில் பல்வேறு விரைவுச் சாலைகள், மற்றும், அனுமதியுடன் மட்டுமே வாகனங்களால் அணுகத் தகுந்த சாலைகளை, தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் அமைத்து வருவதால், விபத்துகளின் எண்ணிக்கை குறையும் என்று அமைச்சர் தெரிவித்தார். சாலைகளின் தரம், சுங்கக் கட்டண வசூல், சட்டத்தின் அமலாக்கம் உள்ளிட்ட எல்லா பணிகளையும் ஒருங்கிணைந்து கவனிக்கும் வகையிலான புதிய நடைமுறை ஒன்றை, அடுத்த 3 மாதங்களுக்குள் இறுதி செய்து, நாட்டின் முக்கிய சாலைகளில் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் மேலும் கூறினார்.

------------------------------

**உரம்** (15)

நாட்டில், டை-அமோனியம் பாஸ்பேட் உரத்திற்கு தட்டுப்பாடு இருப்பதாக கூறப்படுவதை, மத்திய அரசு நிராகரித்துள்ளது. இதுதொடர்பான ஊடகச் செய்திகள் தவறானவை – உண்மை நிலைக்கு மாறானவை என்று, மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சகம்

செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது. DAP உரம் வெளிநாடுகளில் இருந்து இந்தியாவிற்கு வந்து சேருவதில், பல்வேறு புவி-அரசியல் காரணங்களால் சில தாக்கங்கள் ஏற்பட்ட போதிலும், இவ்வாண்டு செப்டம்பர் முதல், நவம்பர் வரையிலான காலத்தில், விவசாயிகளுக்கு கிடைக்கும் உரத்தின் அளவை அதிகரிக்க, அமைச்சகத்தின் உரத் துறை தீவிர முயற்சிகளை எடுத்து இருப்பதாகவும், அமைச்சகம் கூறியுள்ளது. விவசாயிகளின் நன்மைக்கான மத்திய அமைச்சரவை முடிவின்படி, DAP மானியம், நடப்பாண்டு ராபிப் பருவம் முதல் உயர்த்தப் பட்டுள்ளதாகவும், உர மானியத்திற்கான பட்ஜெட் ஒதுக்கீடுகள், 24 ஆயிரத்து 475 கோடி ரூபாயாக அதிகரிக்கப் பட்டுள்ளதாகவும், அமைச்சகம் தெரிவித்துள்ளது.

------------------------------

**வானிலை** 1 (18)

வங்கக் கடலில் உருவான டானா புயல், தீவிர புயலாக வலுப்பெற்று இன்று, வடமேற்கு வங்கக் கடலில், ஒடிசா மாநிலம் பாராதீப்பிற்கு தென்கிழக்கே, 210 கிலோ மீட்டர் தொலைவில் மையம் கொண்டுள்ளது. இது வடக்கு-வடமேற்கு திசையில் மேலும் நகர்ந்து, இன்று இரவுக்கும், நாளை அதிகாலைக்கும் இடைப்பட்ட காலத்தில், பூரி மற்றும் சாகர் தீவுக்கு இடையே, மிக தீவிர புயலாக ஒடிசா மற்றும் மேற்குவங்க கரையை கடக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. புயல் கரையை கடக்கும் போது, சம்பந்தப்பட்ட பகுதிகளில், அதிகபட்சம் மணிக்கு 120 கிலோ மீட்டர்

வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடும் என்றும், வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உயிர் சேதங்களை பூஜ்யமாகவும், உடைமை சேதங்களை குறைந்தபட்ச அளவிலும் கட்டுப்படுத்தும் வகையில் புயல் நிலவரங்களை எதிர்கொள்ள, ஒடிசா அரசும், மேற்குவங்க அரசும் எல்லா முன்னேற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றன.

ஒடிசாவில் புயல் வாய்ப்பு அதிகம் உள்ள கேந்திரபாரா, பாலாசோர், பத்ரக், மயூர்பஞ்ச் உள்ளிட்ட 6 மாவட்டங்களிலும், அதி கனமழைக்கு அதிக வாய்ப்புள்ள வேறு 9 மாவட்டங்களிலும், அடுத்த 48 மணி நேரத்திற்கு உஷார் நிலை அறிவிக்கப் பட்டுள்ளது. மாநிலத்தில் இதுவரை சுமார் 3

***வானிலை*** 2 (18)

லட்சம் பேர் பேர், தாழ்வான பகுதிகளில் இருந்து, பல்நோக்கு புயல் பாதுகாப்பு மையங்களுக்கு மாற்றப் பட்டுள்ளனர். பள்ளி – கல்லூரிகளுக்கு நாளை வரை விடுமுறை அறிவிக்கப் பட்டுள்ளது. பெரும் எண்ணிக்கையில் ரயில்கள் ரத்து செய்யப் பட்டுள்ளன. விடுமுறையில் உள்ள டாக்டர்கள் மற்றும் அரசு ஊழியர்கள், மீண்டும் பணிக்கு அழைக்கப் பட்டுள்ளனர். மத்திய-மாநில பேரிடர் மீட்புப் படையினர், உதவி-மீட்புப் பணிகளுக்கு தயார் நிலையில் வைக்கப் பட்டுள்ளனர். மீனவர்கள் கடலுக்குள் செல்ல தடை விதிக்கப் பட்டுள்ளது. புயல் நிலவரங்கள் குறித்து ஒடிசா முதலமைச்சர் திரு. மோகன் சரண் மாஜி, இன்று, புவனேஸ்வரில், உயர்நிலை மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

மேற்குவங்கத்திலும், புயலின் தாக்கத்திற்கு வாய்ப்பு அதிகம் உள்ள மேற்கு மேதினிபூர், கிழக்கு மேதினிபூர் உள்ளிட்ட மாவட்டங்களில் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இதற்கிடையே, தென்கிழக்கு அரபிக் கடல் மற்றும் அதை ஒட்டிய லட்சத் தீவு பகுதிகளில், இன்று, வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. வரும் 30ஆம் தேதி வரை, தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் மழை நீடிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. இன்றைய தினம், கோவை, நீலகிரி, சேலம், ஈரோடு, தர்மபுரி,

***வானிலை*** 3 (6)

கிருஷ்ணகிரி, கடலூர், விழுப்புரம், மயிலாடுதுறை, கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, தமிழகத்தில் கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, கிருஷ்ணகிரி மாவட்டம் கெலவரப்பள்ளி அணை, குமரி மாவட்டம் தக்கலை ஆகிய இடங்களில், தலா 12 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

------------------------------

***கார் பேரணி*** (7)

இந்திய கடற்படையின் ஆண்டு விழாவை முன்னிட்டு, கடந்த 17ஆம் தேதி சென்னையில் இருந்து புறப்பட்ட விழிப்புணர்வு கார் பேரணி, தமிழகத்தில், கடல்சார் பாரம்பரியம் மிக்க பல்வேறு இடங்கள் வழியாக

கன்னியாகுமரி வரை, சுமார் ஆயிரத்து 800 கிலோ மீட்டர் பயணித்து, இன்று மீண்டும் சென்னை திரும்பியது. கார் பேரணிக் குழுவினரை, தமிழ்நாடு-புதுச்சேரி மண்டல கடற்படை தலைவர் ரியர் அட்மிரல் ரவிகுமார் திங்ரா, ஐஎன்எஸ் அடையாறு வளாகத்தல் வரவேற்றார்.

-------------------------------

*புதுச்சேரி-வெடிகுண்டு* (9)

புதுச்சேரியில் தொடர் வெடிகுண்டு புரளிகளை தொடர்ந்து, இன்று கடலூர் சாலையில் உள்ள தனியார் வணிக வளாகத்தில், காவல், தீயணைப்பு, வருவாய், சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறையினர் இணைந்து, வெடிகுண்டு ஒத்திகை நடத்தினர். வெடிகுண்டு மிரட்டல் வந்தால் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது பற்றிய இந்த ஒத்திகையில் மோப்ப நாய்களுடன் வெடிகுண்டு நிபுணர்களும் பணயில் ஈடுபடுத்தப் பட்டனர். வணிக வளாகத்தில் உள்ள கடைகளின் ஊழியர்களும், பொது மக்களும் வெளியேற்றப்பட்டு, வெடிகுண்டு சோதனை ஒத்திகை மேற்கொள்ளப்பட்டது. ஒத்திகை பணிகளால், கடலூர் சாலை பரபரப்பாக காணப்பட்டது.

-------------------------------

*காப்பி எடிட்டர் (18)*

ஓர் அறிவிப்பு

புதுச்சேரி ஆகாஷ்வாணி வானொலி நிலையத்தில் ஒப்பந்த அடிப்படையிலான ஒரு Copy Editor பணியிடத்திற்கு, விண்ணப்பங்கள்

வரவேற்கப்படுகின்றன. 35-வயதிற்கு உட்பட்ட பட்டதாரிகள், ஊடகத் துறையில் 5 ஆண்டு அனுபவம் பெற்றிருந்தால், இதற்கு விண்ணப்பிக்கலாம். இதழியல், வெகு ஜனத் தொடர்பியல், மற்றும் சம்பந்தப்பட்ட இதர துறைகளில் பட்டம் அல்லது முதுகலைப் பட்டயம் பெற்றவர்களாக இருந்தால், 3 ஆண்டு ஊடகத் துறை அனுபவம் போதுமானது. விண்ணப்ப தாரர்கள், இந்தி அல்லது ஆங்கிலம், மற்றும், தமிழில் மொழித் திறன் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளத் தேடுதல் பொறியின் பயன்பாட்டில் அனுபவம் உள்ளவர்களாகவும், நடப்பு விவகாரங்கள், பிராந்தியப் பிரச்சனைகள், மற்றும் தேசியப் பிரச்சனைகளை அறிந்தவர்களாகவும் இருத்தல், விரும்பத் தக்க தகுதியாக கருதப்படும். ஓராண்டு காலத்திற்கான, பின்னர் நீட்டிக்கத் தகுந்த, இந்த முழுநேர ஒப்பந்தப் பணிக்கு, மாதம் 35 ஆயிரம் ரூபாய் தொகுப்பூதியம் வழங்கப்படும். தகுதியும், மேற்கூறிய நிபந்தனைகளின் அடிப்படையில் பணிபுரியும் ஆர்வமும் உள்ளவர்கள், applications.prasarbharati.org என்ற இணையதளம் மூலம், உரிய சான்றிதழ் நகல்களுடன் விண்ணப்பிக்கலாம்.

------------------------------

*கிரிக்கெட் டெஸ்ட் (7)*

இந்தியா-நியூசிலாந்து அணிகளுக்கு இடையே, புனேயில் இன்று தொடங்கிய 2ஆவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில், ஆட்ட நேர இறுதி வரை, இந்திய அணி தனது முதலாவது இன்னிங்சில், 1 விக்கெட்

இழப்பிற்கு, 16 ரன் எடுத்து இருந்தது. முன்னதாக, நியூசிலாந்து அணி, 259 ரன்னுக்கு, முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை இழந்தது. 3 போட்டிகளை கொண்ட இத்தொடரில், தற்போது நியூசிலாந்து அணி, 1க்கு பூஜ்யம் என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

-------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

விண்வெளித் துறைக்கு, பிரத்தியேகமான ஆயிரம் கோடி ரூபாய் தொழில் துணிவு மூலதன நிதி ஒன்றை உருவாக்க, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அரசின் புதிய உயிரி தொழில்நுட்ப கொள்கையினால், பசுமை வளர்ச்சிக்கு மாறும் முயற்சிகள் வலுப்பெறும் என்று, மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

நாட்டின் சாலை பாதுகாப்புக் கட்டமைப்பில், நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப் படுவதாக, மத்திய சாலைப் போக்குவரத்து, மற்றும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

வங்கக் கடலில் உருவான டானா புயல் இன்று இரவு பூரி மற்றும் சாகர் தீவுக்கு இடையே, மிக தீவிரப் புயலாக, ஒடிசா மற்றும் மேற்குவங்க கரையை கடக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.